2003 ஜனவரி 31]

(எ) நீலகிரி மாவட்டம், ஆதிதிராவிட இளைஞர்களுக்குக் கடன் உதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் கா. கந்தசாமி, வி. ஜெயராமன் மற்றும் இரா.தா. இன்பத் தமிழன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு தாட்கோ மூலம் படித்த ஆதிதிராவிட இளைஞர்களுக்குக் கடன் உதவி வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு அவர்களுக்குக் கடன் உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கடந்த நிதி ஆண்டில் 2001—2002—ல் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த 1167 நபர்களுக்கு ரூ.148.60 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.36.65 இலட்சம் மானியமாகவும், மீதி 111.95 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன்களாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 1020 பேருக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும் மீதமுள்ளவர்களுக்கு தனி நபர்களாகவும் மானியம் மற்றும் கடனாக 25—3—2002 அன்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது. அதிலே, அந்த மாவட்ட அமைச்சரான மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினரான திரு. கா. கந்தசாமி அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்தி வரவேற்று பேசினார்கள். நடப்பு நிதியாண்டில் 2002—2003—ல் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஒப்புதல் அளித்து தாட்கோ மூலம் செயல்படுத்தப்படுகிற மாவட்ட செயல் திட்டத்தின்படி நீலகிரி மாவட்டத்தில் 2064 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.168.31 இலட்சம் கடனாக வழங்கப்படவுள்ளது. இதில் 74.16 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. மேற்கண்ட கடன் தொகையில் 75 சதவிகிதம் சுய உதவிக் குழுக்களுக்கும் மீதமுள்ள 25 சதவிகிதம் தனி நபர்களுக்கும் வழங்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிதி ஆண்டில் தேசிய துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும்

[திரு. சொ. கருப்பசாமி] [2003 ஜனவரி 31

மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 15 குழுக்களுக்கு ரூ.75 இலட்சம் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டு துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளையும் குழுக்களாக அமைக்கும் பணி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தேசிய துப்புரவுப் பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழக தனி நபர் கடன் உதவி திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சம் தனி நபர் கடன்களாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு படித்த 155 இளைஞர்களுக்கு ரூபாய் 8.91 இலட்சம் செலவில் சிறந்த வேலைவாய்ப்புத் தொழில் பயிற்சி தரப்பட்டது. நடப்பு நிதியாண்டில் நீலகிரி மாவட்டத்தில் 185 படித்த இளைஞர்களுக்கு ரூபாய் 15.54 இலட்சம் செலவில் வேலைவாய்ப்புத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 43,206 நபர்களுக்குப் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 15.86 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்கள் தொழில் தொடங்க விரும்புபவர்களுக்கு தாட்கோ மானியத்துடன் கடன் வசதி செய்து தரவும் வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் மலைப் பிரதேசமாகும். அங்கு ஆதிதிராவிடர் பெருமக்கள் பெருமளவில் வாழ்கின்றனர். படித்த இளைஞர்களின் எதிர்கால வாழ்வு கருதி 50 விழுக்காடு கடனை மானியமாக வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூரை விட்டு நீலகிரிக்கு எப்போது போனீர்கள்? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர்களுக்கு 50:50 என்ற அளவில், பாதி மானியத்தில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர்களுக்கு, தனி நபர் கடன்-

2003 ஜனவரி 31] [திரு. சொ. கருப்பசாமி]

வழங்கக்கூடியதற்கு மானியம் 25 சதவீதம். அதாவது, அவர்களுக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாய் மானியமாகக் கிடைக்கும். எவ்வளவு தொகை கடன் பெற்றாலும் ஒருவருக்கு மானியம் அதிகபட்சமாக 25,000 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த ஆதிதிராவிட இளைஞர்கள் கடன் பெற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகும்போது கடன் தர மறுக்கிறார்கள். அதற்கு, வங்கிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடன், வங்கி அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசினார்கள். கடந்த காலங்களில், குறிப்பாக தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பல்வேறு கடன்களை முறை தவறி, உண்மைக்கு மாறாக, தவறான முறைகளில் வழங்கியதன் விளைவாக, அதனை எல்லாம் சீர் செய்ய வேண்டுமென்கிற அடிப்படையில்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வங்கி அதிகாரிகளை அழைத்து நேரடியாகப் பேசி முறையாகப் பயிற்சி பெற்ற, படித்த இளைஞர்களுக்கு தாட்கோ மூலமாகக் கடன் வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(ஏ) தகுந்த பயிற்சி இல்லாதோர்க்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துத் துறையில் சரியான, தகுந்த பயிற்சி இல்லாமல் வழங்கப்படும் ஓட்டுநர் உரிமங்களைத் தடுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.